2022 மே 5] [திருமதி S. விஜயதரணி]

மேற்கு மாவட்டத்தின் கட்சி செயலாளராகவும் இருக்கிறார்கள். ஆகவே, மக்கள் பிரதிநிதிகளாகிய M.P., M.L.A., ஆகிய எங்கள் எல்லோரையும் இணைத்து ஒரு குழுவை அமைத்து, இந்த வழக்கு நடந்து கொண்டிருக்கும்போதே, எங்களையும் அழைத்துச் சென்று கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி, சுமுகமாகப் பேசி தண்ணீரைப் பெறுவதற்கும், உச்ச நீதிமன்றத்தின் வாயிலாக வழக்கை நடத்திடவும் நடவடிக்கை எடுக்க அரசின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்யாறு பற்றிய வரலாறை நான் சொல்ல வேண்டிய எல்லாவற்றையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லிவிட்டார்கள். ஆகவே, நான் பதில் சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆனால், தூர்வார வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். தண்ணீர் வராத கால்வாய்க்குத் தூர் வாரினால் என்ன, தூர் வாராவிட்டால் என்ன, பிறகு பார்த்துக்கொள்ளலாம்.

(உ) நாகை மாவட்டம், CPCL நிறுவனம் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க கையகப்படுத்தப்படும் நிலத்திற்கு உரிய இழப்பீடு மற்றும் வேலைவாய்ப்பு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள். நீங்கள் என்ன கேட்கப்போகிறீர்கள்? ஒரு வார்த்தையில் கேளுங்கள்.

***திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். நாகப்பட்டினம் மாவட்டத்தில் பனங்குடி, நரிமணம் ஆகிய 2 ஊர்களில் CPCL company-க்கு 600 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த பனங்குடி மற்றும் நரிமணம் கிராமங்களில் ஏற்கெனவே ONGC-யிலும் நிலம் எடுத்துவிட்டார்கள்; மீன்வளப் பல்கலைக்கழகத்திற்காகவும் நிலம் எடுத்துவிட்டார்கள். இப்போது CPCL நிறுவனத்திற்காக 600 ஏக்கர் நிலம் எடுக்கிறார்கள். ரூ.41,000 கோடி திட்ட மதிப்பீடு. மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்துவிட்டார்கள். மாவட்ட நிர்வாகம் என்ன சொல்கிறது

[திரு. ஓ.எஸ். மணியன்] [2022 மே 5

என்றால், தமிழ்நாடு நில எடுப்புச் சட்டத்தின்படி பணம் வழங்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால், நாங்கள் கேட்பது, இது மத்திய அரசின் ரூ.41,000 கோடிக்கான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான திட்டம். அதற்கு மத்திய அரசின் நில எடுப்புச் சட்டத்தின்படி நஷ்ட ஈட்டிற்கான பணம் வழங்க வேண்டும். மேலும், அந்த நிலம் கொடுக்கும் குடும்பங்களுக்கு, வீட்டுக்கு ஒருவருக்கு கட்டாயம் வேலை வழங்க வேண்டுமென்ற உத்தரவாதத்தோடு இந்த ஒப்பந்தம் கையொப்பமிடப்பட வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே மத்திய அரசின் சட்டம் வந்ததற்குப் பிறகு தமிழக அரசு நமக்காக ஒரு சட்டம் பிறப்பித்திருக்கிறது. இதுபற்றி மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அந்தந்த மாநிலங்களே நில எடுப்புச் சட்டத்தை இயற்றிக்கொள்ளலாம் என்ற ஒரு சட்டம் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்டது தற்போதும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.

முற்பகல் 11–50

***திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், பனங்குடி பகுதியில் CPCL தொழிற்சாலையின் ஆலை விரிவாக்கப் பணிக்காக நிலம் எடுக்கப்படுகிறது. நிலம் கொடுப்பதற்கு விவசாயிகளிடையே கடுமையான அச்சம் நிலவுகிறது. ஏனென்றால், ஏற்கெனவே அந்த ஆலை அமைக்கப்படும்போது கொடுக்கப்பட்ட உத்தரவாதம் காப்பாற்றப்படவில்லை. நிலம் யார் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு வேலை வழங்குவோம் என்று சொல்லப்பட்ட அந்த உத்தரவாதம் காப்பாற்றப்படவில்லை. இப்போது மீண்டும் நிலத்தைக் கேட்கிறார்கள். மீண்டும் அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுமா என்கிற கேள்வி விவசாயிகள் மத்தியிலே இருக்கிறது. எனவே, இதுகுறித்து அரசு உரிய கவனத்தைச் செலுத்தி, அங்கே அந்த விவசாயிகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும்.

2022 மே 5]

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *என்ன கோரிக்கைகள் விடுக்கிறார்களோ, அதைக் கேட்டு பரிசீலனை செய்து, அதன்படி அந்தத் திட்டம் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

****மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு பேரும் ஒரு நல்ல காரியத்தை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். உடனடியாக நம்முடைய செயலாளர் மற்றும் மாவட்ட நிர்வாகத்தோடு கலந்துபேசி எந்தச் சட்டத்தின்படி எடுத்தால் உங்களுக்கு அதிகப்படியான தொகை கிடைக்கும் என்பதையெல்லாம் ஆராய்ந்து, அங்கே நிலம் கொடுக்கிற மக்களுக்குச் சாதகமாக இந்த அரசாங்கம் செயல்படும். அதுபோன்று, வேலைவாய்ப்பு குறித்து யாருமே சொன்னதுபோன்று இதுவரையில் நடக்கவே இல்லை. இதுமட்டுமல்ல, CPCL மட்டுமல்ல; யாருமே இதுவரையிலும் அப்படி சொன்ன சொல்லை நிறைவேற்றியதாகத் தெரியவில்லை. இதை முதலிலேயே ஒழுங்குசெய்து, நிலம் எடுக்கிற நேரத்திலேயே DRO மத்தியிலே சொல்லி, எழுதி வாங்க முடியுமா என்பதையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அதனை ஒழுங்குசெய்து, அதற்கு வேண்டிய அந்தப் பணிகளைச் செய்து கொடுப்போம் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு பேர்களும் சொன்ன கோரிக்கையை நிச்சயமாக அரசாங்கம் பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*